# சோழிங்கநல்லூர் தொகுதியில் அறிவுசார் மையம்!

## சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ் கேள்விக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி பதில்!





சென்னை, ஏப். 27- சட்டப் பேரவையில் சோழிங்கநல்லூர் தொகுதி கழக உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் ஐ. பெரியசாமி அளித்த பதிலும் வருமாறு:-

**ச.அரவிந்த் ரமேஷ்:** சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் இ. பெரியசாமி:** உறுப்பினர் அவர்கள் புனித தோமையார் மலை ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளில் நூலகங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதில் 8 நூலக கட்டடங்களுக்கு ரூ.18.11 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 7 ஊராட்சிகளின் நூலகக் கட்டடங்களுக்கு பொது நிதியிலிருந்து நிதி எடுக்கப்பட்டு, ரூ.17.05 இலட்சம் செலவில் பணிகள் விரைந்து முடிக்கப்படும்.

**ச.அரவிந்த் ரமேஷ்:** சோழிங்கநல்லூர் தொகுதியில் புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட, வேங்கைவாசல் மற்றும் ஒட்டியம்பாக்கம் ஆகிய இரு ஊராட்சிகளிலும் நூலகம் அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், சித்தாலப்பாக்கம் மற்றும் பெரும்பாக்கம் ஊராட்சிகளில் பகுதிநேர நூலகங்கள் இயங்கி வருகின்றன. எனவே, அந்த நூலகங்களை முழுநேர நூலகங்களாக மாற்றியமைக்க வேண்டும். நன்மங்கலம், கோவிலம்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள நூலகங்கள் தற்காலிக கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, அந்த நூலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டு, தலைவர் கலைஞர் அவர்கள் பேறறிஞர் அண்ணாவின் பெயரால் சென்னையில்நூலகம், எல்லாருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் பெயரால் மதுரையில் நூலகம், தந்தை பெரியார் பெயரால் கோவையில் நூலகம், பெருந்தலைவர் காமராஜர் பெயரால் திருச்சியில் நூலகம், அதேபோன்று, இந்தியாவிலேயே முதன்மையான முதலமைச்சராக விளங்கும் திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பெயரில் சோழிங்கநல்லூரில் மிகப் பெரிய நூலகத்தை அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவாரா என்று கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் இ. பெரியசாமி:** தமிழ்நாட்டில் இருக்கின்ற ஊரகப் பகுதிகளில் நூலகம் அமைக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டுவந்ததே நம்முடைய முதலமைச்சர் தளபதியார்தான். ஏறத்தாழ 12,310 ஊராட்சிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே உருவாக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவையெல்லாம் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 2 ஊராட்சிகளில் நூலகம் இல்லையென்று கேட்கிறார். அந்த இரு ஊராட்சிகளிலும் நூலகம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**ச.அரவிந்த் ரமேஷ்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் தொகுதியில் விளையாட்டுப் போட்டிகளிலும், படிப்பிலும் திறமையான மாணவர்களும் இளைஞர்களும் அதிகளவில் இருக்கின்றார்கள்.

அவர்கள் தங்களை IAS, IPS, IFS போன்ற உயர் பொறுப்புகளுக்குச் செல்லும் ஆர்வத்தோடு இருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் தேர்வை எதிர்கொள்ள வேண்டுமென்றால், UPSC மற்றும் TNPSC போன்றப் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக சோழிங்கநல்லூர் தொகுதியில் இன்றைக்கு 7 ஊராட்சிகள் இருந்தாலும் 1 இலட்சத்து 88 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட பகுதியாக இருப்பதனால், அங்கே அறிவுசார் மையம் அமைக்கப்பட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் இ. பெரியசாமி:** அறிவுசார் மையம் அமைக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். அதுசம்பந்தமாக, நான் அலுவலர்களைக் கலந்து, இந்தத் துறையின் மூலமாகச் செய்ய முடியுமென்றால், நிச்சயமாக அது கட்டித் தரப்படும்.

இவ்வாறு அமைச்சர் ஐ.பெரியசாமி பதிலளித்தார்.

---

முடிச்சூர் ஊராட்சி

# தெற்கு லட்சுமி நகரில் குழந்தைகள் மையம் சீரமைக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் தாம்பரம் எஸ்.ஆர்.ராஜா கேள்வி!



சென்னை, ஏப். 27- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது தாம்பரம் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் கீதா ஜீவன் அளித்த பதிலும் வருமாறு:

**எஸ்.ஆர்.ராஜா:** தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, தெற்கு லஷ்மி நகரில் உள்ள குழந்தைகள் மையத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கீதா ஜீவன்:** செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, தெற்கு லஷ்மி நகரில் செயல்பட்டுவரும் குழந்தைகள் மையமானது 2022-2023 ஆம் நிதியாண்டில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

**எஸ்.ஆர்.இராஜா:** தாம்பரம் தொகுதியில் 51 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. அதில் 44 அங்கன்வாடி மையங்கள் புதிதாக கட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சமத்துவ பெரியார் நகர், எம்.ஜி.ஆர் நகர், ராமகிருஷ்ணாபுரம், கஸ்பாபுரம், கஸ்தூரிபாய் நகர், காந்தி நகர், குறிஞ்சி நகர் ஆகியவற்றில் ஒரு கட்டடத்திற்கு இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 6 அங்கன்வாடி கட்டடங்களுக்குப் புதிதாக கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி. கீதா ஜீவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் தொகுதியில் மீதமுள்ள 6 அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று கோரியுள்ளார்கள். எந்தெந்த கட்டடங்கள் என்று, மைய எண்களின் பட்டியல்களைத் தரும்போது, அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அனுப்பி வைத்து, நிச்சயமாக அதற்குத் தேவையான ஏற்பாடு செய்யப்படும்.

**எஸ்.ஆர்.இராஜா:** பணியாளர்கள் 5, உதவிப் பணியாளர்கள் 18 ஆகிய பணியிடங்கள் தற்போது காலியாக இருக்கின்றன. குறிப்பாக, கோவிலாஞ்சேரி, மோத்திலால் நகர், ராமகிருஷ்ணாபுரம், வெங்கப்பாக்கம், குறிஞ்சி நகர், சமத்துவ பெரியார் நகர், கோவிந்தசாமி நகர் பூங்கா, முடிச்சூர்-1 மற்றும் 2, பழைய பெருங்களத்தூர்-1 மற்றும் 2, புது பெருங்களத்தூர், புலிகொரடு, வேலு நகர், ஆதி நகர், ஆனந்தபுரம், பாரதி பூங்கா, மாடம்பாக்கம், காந்தி நகர், நூத்தந்சேரி, திருப்பூர் குமரன் பூங்கா, வினோபா நகர் பகுதி ஆகிய பகுதிகளிலெல்லாம் பணியாளர்கள் இல்லாத நிலை இருக்கிறது. எனவே, உடனடியாக அந்தப் பணியிடங்களை நிரப்பி தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி. கீதா ஜீவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, துறையின்மூலம், முதலமைச்சர் அவர்களின் அனுமயோடு 7,997 பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் எடுப்பதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. விரைவில் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

டி.சுந்தரம் ஏற்பாடு! எஸ்.நந்தகோபால் – துக்காராம் பங்கேற்பு!

# மாதவரம் 30 அ வட்டத்தில் தண்ணீர் பந்தல்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, ஏப். 27 - சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டக் கழகம் சார்பில் தமிழக முதல்வர் கழகத் தலைவர் துணை முதல்வர் அவர்களின் அறிவிப்பினை ஏற்று வட்டக் கழக செயலாளர் டி. சுந்தரம் ஏற்பாட்டில் இன்று (27.04.2025 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10:30 மணி அளவில் விநாயகபுரம் திருவள்ளுவர் சிலை அருகில் மக்களின் கோடைகால தாகம் தீர்க்கும் நீர் மோர் பந்தலை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் சுதர்சனம் திறந்து வைக்கிறார்.

உடன் மண்டல குழு தலைவர் எஸ் நந்தகோபால் பகுதி கழக செயலாளர் ஜி துக்காராம் மாமன்ற உறுப்பினர் திருமலை, ஜி.துரை சாமி, புத்தகரம் ஈ ஏழுமலை, குணா, சுந்தரி, குட்டி மோகன், வட்ட செயலாளர் எம் சரவணன் துரை ஸ்ரீராமுலு சிவில் எம் செல்வம் தே ரமணன் விஜயலட்சுமி ஆனந்தன் எஸ் ஏ சீனிவாசன் மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ஜி பார்த்தசாரதி மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் லட்சுமி காந்தன் டி.கே. வினோத் இ ராமன் எஸ்பி கண்ணன் சி பரமேஸ்வரி அபிப் ரகுமான். கே நரேந்திரன் ஏ வி முருகன் எஸ் என் ராஜி பிஎஸ்என்எல் கோ தயாளன் எம் சீனிவாசன் எஸ் முத்து ஆர் கண்ணன் டி குருமூர்த்தி வி டி மூர்த்தி வி. சந்தோஷ் பிஎஸ்என்எல் குமார் வெங்கட்ராமன் கருணாநிதி காஞ்சி சண்முகம் உமா மகேஸ்வரி பி கௌசல்யா பி விக்னேஷ் ஆர் தீபக் கா வெற்றிவேல் ஏ கே ஆர் சுரேஷ் டிவிஎஸ் கோபி சக்கரபாணி எம் நரேந்திரன் பி சரத் ஆர் ராகுல் பி தேவராஜ் விக்னேஷ் வெற்றிவேல் மாதவி வி பாஸ்கர் செண்பகராஜ் சாய் ரா பானு டி எஸ் உதயநிதி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

---

திரு.வி.க. நகர் பகுதி 73வது வார்டு

# அம்மையம்மாள் தெருவில் புதிய மின்மாற்றி அமைக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் திரு.வி.க. நகர் ப.தாயகம் கவி கேள்வி!



சென்னை, ஏப். 27- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது திரு.வி.க.நகர் தொகுதி உறுப்பினர் ப.தாயகம் கவி கேட்ட கேள்வியும், அக்கேள்விக்கு அமைச்சர் செந்தில் பாலாஜி அளித்த பதில் வருமாறு:

**ப.தாயகம்கவி:** திரு.வி.க. நகர் தொகுதி, 73-வது வார்டு, அம்மையம்மாள் தெருவில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்பொழுது?

**அமைச்சர் செந்தில்பாலாஜி :** திரு.வி.க. நகர் தொகுதி, வார்டு எண்:73 அம்மையம்மாள் தெருவில் ஏற்கெனவே இயக்கத்தில் இருந்த நவீன மின்மாற்றியிலிருந்து மின்பளுக்களைப்பிரித்து, கூடுதலாக புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. தற்போது இரண்டு மின்மாற்றிகள்மூலம் அப்பகுதிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் தாயகம் கவி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ப.தாயகம்கவி :** என்னுடைய கோரிக்கையை ஏற்று, புதிய மின்மாற்றி அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்போலவே, கடந்த காலங்களில் திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் வார்டு எண் 71-ல் ஆரம்பித்து, வார்டு எண் 76 வரையில் சுமார் 31 இடங்களில் இதைப் போலவே புதிய மின்மாற்றிகள் அமைத்துத் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன்.

அதன் அடிப்படையில் வார்டு எண் 71-ல் பெரம்பூர் ஹை ரோடு, நெல்வயல் சாலை, முத்துகுமாரசாமி தெரு, சுப்பிரமணியன் தெரு, மேட்டுப்பாளையம், எலிகன் தெரு, கர்நாட்டிக் மில் குடியிருப்பு, வார்டு எண் 73-ல் பிராகாஷ்ராவ் காலனி, வார்டு எண் 74-ல் பிரிஸ்லி நகர், வார்டு எண் 75-ல் சுப்புராயன் 4-வது தெரு, வார்டு எண் 76-ல் படவட்டம்மன் கோயில் தெரு, கண்ணப்பன் தெரு, வெங்கடேசபக்தன்தெரு,குட்டித் தெரு, வெங்கட்டம்மாள் சமாதி தெரு ஆகிய 14 இடங்களில் புதிய மின்மாற்றி அமைக்கும் பணி முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சொன்ன இந்த 14 இடங்களைத் தவிர மேலும் 16 இடங்களில் குறிப்பாக வார்டு எண் 71-ல் சின்னையா நியூ காலனி, ஸ்கூல் ரோடு, ஆனந்த வேலு தெரு, ராஜேஸ்வரி தெரு, ஜகதாம்பாள் தெரு, வார்டு எண் 72-ல் அம்பேத்கர் நகர் 2-வது தெரு, திரு.வி.க. நகர் 8-வது தெரு, தாஸ் நகர் 2-வது தெரு, தாஸ் நகர் 8-வது தெரு, வ.உ.சி. நகர் 12-வது தெரு, வாசுகி நகர் “ஏ”பிளாக் ஜோசப் தெரு, வார்டு எண் 73-ல் பென்சினர்ஸ் லேன், கிரே நகர் 2-வது தெரு, வார்டு எண் 74-ல் டேங்க் பண்ட் ரோடு, வார்டு எண் 76-ல் நாராயண மேஸ்திரி தெரு,ஆகிய 16 இடங்களில் புதிய மின்மாற்றி அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணியை விரைந்து முடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதைபோல, வார்டு எண் 72-ல் கஸ்தூரிபாய் காலனியில் புதிய மின்மாற்றி அமைக்கும் பணி தற்போது வரை மதிப்பீட்டு நிலையில் இருக்கிறது. எனவே, அதையும் விரைந்து முடித்துத் தருமாறு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் செந்தில்பாலாஜி :** திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் அதிகரித்து வருகின்ற மின் தேவையைக் கவனத்திலே கொண்டு அங்கே புதிதாக 31 புதிய மின்மாற்றிகள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு, அவற்றில் 14 பணிகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. 16 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒன்று திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யக்கூடிய நிலையில் இருக்கிறது. நடைபெற்றுக் கொண்டிருக்கிற 16 பணிகளையும் விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இருக்கின்ற அந்த ஒரு பணியும் விரைவாக பணிகளை தொடங்கி அதையும் விரைந்து முடிப்பதற்கு துறையின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**ப.தாயகம்கவி :** அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை போலவே திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் புதிய நவீனமயமான RMU-க்களை ஆங்காங்கே ஒரு சில இடங்களில் அமைத்திருக்கிறார்கள். எனவே, அந்த புதிய நவீனமயமான RMU-க்களை திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் அனைத்து இடங்களிலும் அமைத்துத் தருவார்களா என்பதை தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் செந்தில்பாலாஜி :** இந்த 4 ஆண்டுகளில் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதிதாக 5,433 புதிய RMU-க்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. உறுப்பினர் தாயகம்கவி அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்ற அந்தப் பகுதியில் அரசு பரிசீலிக்கும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

# மாணவர் அணி சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை, ஏப்.27- சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் நீர், மோர் பந்தல் திறப்பு விழாவில் கழகத்தினர் கலந்து கொள்ளுமாறு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிவித்துள்ளார்

அவரது அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதிக்குட்பட்ட மூன்று இடங்களில் நீர் மோர்பந்தல் இன்று (27.4.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில்

1. மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர். விஜய் ஏற்பாட்டில், தேனாம்பேட்டையில் அமைந்துள்ள இளங்கோ சாலை மற்றும் எல்லையம்மன் காலனி

2. மாவட்டத் துணை அமைப்பாளர் கு.ஸ்ரீராம் ஏற்பாட்டில் கோபாலபுரம் கிரவுண்டு அருகில்

3. ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆ. அருண்குமார் ஏற்பாட்டில் 29, கிரீம்ஸ் சாலை

ஆகிய இடங்களில் நீர் மோர் பந்தலை நான் (நே. சிற்றரசு) திறந்து வைக்கிறேன். இதில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை, மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலை, ஆர்.என். துரை, ஆ சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின் பாபு, ஐ.கென்னடி, ஜெ.நற்குணநாதன், வட்டச் செயலாளர்கள் எஸ். என்.கே.ராமன், கோ.யுவராஜ், ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள். ஆகவே சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிக்கு உட்பட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு தெரிவித்துள்ளார்.

---

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கே.ஏழுமலை எம்.சி. திறந்து வைக்கின்றனர்

# 131வது வட்ட தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல்!

## ஜெ.சீனிவாசன் பங்கேற்பு! எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள்!

சென்னை, ஏப் 27- தமிழ்நாடு முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு 131அ வட்டம் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி சார்பில் தண்ணீர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி இன்ற(27-04-2025) காலை 10:30 மணியளவில் அசோக் நகர் 4வது அவென்யூ, டாக்டர் அம்பேத்கார் சாலை சந்திப்பு (LPF ஆட்டோ நிறுத்தம அருகில்) நடைபெறுகிறது.

முன்னிலை :131அ வட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி நிகழ்ச்சி ஏற்பாடு: மாவட்ட பிரதிநிதி ஜெ.சீனிவாசன்

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மோர் மற்றும் பழங்கள் வழங்குபவர்கள்: ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் திரு.கே.ஏழுமலை எம்.சி., உட்பட கழக முன்னணியினர் கலந்து கொள்ள உள்ளனர்,

ஆகவே 131அ வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் உட்பட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு, நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் பகுதி துணை அமைப்பாளர் நாவலர் நகர் முருகா ஏற்பாட்டில் கோடைகால வெயிலின் தாக்கத்தை தணிக்கும் வகையில் தண்ணீர், நீர்மோர் பந்தல் பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் நேதாஜி கணேசன் எம்.சி, மாநில, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி இலக்கிய அணி சார்பில் பகுதி அமைப்பாளர் செந்தூர்சிவா தலைமையில் நீலாங்கரை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள ஹாட் சிப்ஸ் வளாகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் கொட்டிவாக்கம் எம்.பார்த்திபன், கலந்துகொண்டு பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தும் பல தீர்மானங்கள் நிறைவேற்றியும் ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.